அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

ந.க.எண். 014894 /பி1/2021 நாள் : 07 .09.2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுகள் – தனித்தேர்வர்கள் – தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல் குறித்த பத்திரிக்கை செய்தி – வெளியிடுதல் – குறித்து.

*****

செப்டம்பர் 2021–மாதத்தில் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வினை எழுதவுள்ள தனித் தேர்வர்கள் தங்களின் தேர்வுகூட நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்தல் குறித்த “**செய்திக்குறிப்பு**” இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பொதுமக்களும், தேர்வர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடவும், வானொலி / தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

“**இது விளம்பரம்** ” அல்ல எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு : செய்திக்குறிப்பு

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.**

**செப்டம்பர் 2021 – பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வுகள் தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்தல் தொடர்பான**

**செய்திக்குறிப்பு**

நடைபெறவுள்ள செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (தட்கல் உட்பட) **08.09.2021 (புதன்கிழமை) காலை 11:00 மணி முதல் www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் வாயிலாக தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுக்கான, தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்யும் முறை**

**தேர்வர்கள் www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று "HALL TICKET" என்ற வாசகத்தினை 'Click' செய்தால் தோன்றும் பக்கத்திலுள்ள **"SSLC SUPPL . EXAMINATION SEPTEMBER 2021 - HALL TICKET DOWNLOAD"** என்ற வாசகத்தினை **"Click"** செய்து தோன்றும் பக்கத்தில், தங்களது விண்ணப்ப எண் (Application Number) அல்லது நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செய்முறைத் தேர்வெழுத வேண்டிய தனித் தேர்வர்களுக்கு தேர்வுக்கூட நுழைவுச் சீட்டில் அறிவிக்கப்பட்ட தேர்வு மையத்திலேயே **13.09.2021 மற்றும் 14.09.2021** ஆகிய இரு நாட்களில் செய்முறைத் தேர்வு நடத்தப்படும். எனவே, இத்தேர்வர்கள் உரிய தேர்வு மைய தலைமையாசிரியரை மேற்படி நாட்களில் அவசியம் அணுகுமாறு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத்தேர்வுக்கான, தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்யும் முறை**

தேர்வர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று "HALL TICKET" என்ற வாசகத்தினை 'Click' செய்தால் தோன்றும் பக்கத்திலுள்ள "**HSE FIRST YEAR SUPPL. EXAMINATION SEPTEMBER 2021 – HALL TICKET DOWNLOAD"** என்ற வாசகத்தினை 'Click' செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) அல்லது நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உரிய தேர்வுக்கூட நுழைவுச்சீட்டின்றி எந்தவொரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் : சென்னை – 6**
**நாள் : 07.09.2021**